கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 09.02.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அதிகாரிகளுக்கான பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலுள்ள புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறை , புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகத்தின் நிதியுதவி பெற்று செயல்படும் சாண எரிவாயு மற்றும் பயிற்சி மையத்தின் (BDTC) மூலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அதிகாரிகளுக்கான பயிற்சி 05.02.2024 முதல் 08.02.2024 வரை நான்கு நாட்களுக்கு நடத்தப்பட்டது.

பயிற்சியின் சிறப்பு அம்சமாக சாண எரிவாயு உற்பத்தி , அதன் பயன்பாடு, சுத்திகரிக்கப்பட்ட பயோமீத்தேன் தயாரிப்பு , சூரிய வெப்பம் ஒளிமின்னழுத்த தொழில்நுட்பங்கள் மற்றும் இதர புதிய புதுப்பிக்கவல்ல தொழில்நுட்பங்களை பற்றி எடுத்துரைக்கப்பட்டது . மேலும் சாண எரிவாயு காலனின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு குறித்த நடைமுறை பிரச்சனைகளைப் பற்றி அறிய பயிற்சியாளர்கள் களப்பயிற்சியிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

பயிற்சியின் நிறைவாக 08.02.2024 அன்று வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிறைவு விழா நடைபெற்றது. புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறையின் தலைவர் மற்றும் சாண எரிவாயு மேம்பாடு மற்றும் பயிற்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவாய் தே.ரமேஷ் வரவேற்புரை வழங்கினார். வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் அ.ரவிராஜ் சிறப்புரை ஆற்றி பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார். இறுதியாக முனைவர் வி. பழனிசெல்வம் நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**